பொதுக்காலத்தின் 34- ஆம்ஞாயிறு

அரசராம் கிறிஸ்து அரசர் பெருவிழா

எசேக்கியேல் 34: 11–12, 15–17; 1 கொரிந்தியர் 15: 20–26, 28;
மத்தேயு 25: 31–46

முன்னுரை

சிறுவன் ஒருவன் தன் பாட்டியுடன் ஒரு பெரிய பேராலயத்திற்குச் சென்றான். ஆலயத்தின் வண்ணக் கண்ணாடிச் சாளரங்களை வியப்புடன் பார்த்தவன், " பாட்டி, இவர்கள் எல்லாம் யார்?" என்று கேட்டான். அதற்குப் பாட்டி, " இவர்கள்தான் புனிதர்கள்" என்று பதிலளித்தார். மறுநாள் பள்ளியில், ஆசிரியை மாணவர்களிடம், " புனிதர் என்றால் யார்?" என்று கேட்டார். உடனே அந்தச் சிறுவன், " யார் வழியாக ஒளி ஊடுருவிப் பாய்கிறதோ, அவர்தான் புனிதர்" என்று சட்டென்று பதிலளித்தான்.

இன்று நாம் கொண்டாடும் அனைத்துலக அரசராம் கிறிஸ்து பெருவிழா விலே, நம் அரசராம் கிறிஸ்துவின் ஒளி அதிகாரத்தாலோ, ஆதிக்கத்தாலோ அல்ல, மாறாக அன்பு, இரக்கம் மற்றும் பரிவு ஆகியவற்றின் வழியாகவே ஒளிர்கிறது என்பதைத் திருச்சபை நமக்கு நினைவூட்டுகிறது.

அவர் காணாமற்போனதைத் தேடிச் செல்லும், காயப்பட்டதைக் கட்டுப்போடும், ஏழை எளியவர்களோடும் கைவிடப்பட்டவர்களோடும் தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளும் நல்ல ஆயன்— நம் அரசர்.

வாழ்வின் இறுதித் தீர்ப்பு என்பது வெற்றி, அந்தஸ்து அல்லது வெளித்தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல; மாறாக, அன்றாட வாழ்வில் நாம் காட்டும் எளிய அன்புச் செயல்களை அடிப்படையாகக் கொண்டது என்று இன்றைய நற்செய்தியில் இயேசு நமக்குத் தெளிவுபடுத்துகிறார். நாம் பசித்தோருக்கு உணவளிக்கும்போதும், அந்நியரை ஏற்றுக்கொள்ளும்போதும், துன்புறுவோருக்கு ஆறுதல் அளிக்கும்போதும், காயப்பட்டோரை மன்னிக்கும்போதும், கிறிஸ்துவின் ஒளி நம் வழியாகப் பிரகாசிக்கிறது.

ஆயினும், இயேசு விரும்பும் அளவிற்கு நாம் அன்பு செய்யத் தவறிவிடுகிறோம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். பல நேரங்களில் அலட்சியம், சுயநலம், புறக்கணிப்பு ஆகியவற்றால் தேவையில் இருப்போரைக் கடந்துசென்ற ிருக்கிறோம்; நம்மைச் சுற்றியுள்ளவர்களின் துன்பங்களுக்கு நம் இதயங்களை மூடிக்கொண்டிருக்கிறோம்.

எனவே, தீர்ப்பிட மட்டுமல்ல, குணப்படுத்தவும், சீர்படுத்தவும் வருகின்ற நம் ஆயனும் அரசருமாகிய கிறிஸ்துவின் இரக்கத்தில் நம்பிக்கை கொண்டு, நம் பாவங்களை ஏற்றுக்கொண்டு, இத்திருப்பலியில் தகுதியுடன் பங்கேற்க நம்மைத் தயாரிப்போம்.

மறையுரை

அரசர் ஒருவர் தம் மக்களின் நிலைமையை அறிய நாட்டிற்குள் மாறுவேடத்தில் செல்ல முடிவெடுத்தார். தம் அரச உடைகளைக் களைந்துவிட்டு, ஓர் ஏழை வழிப்போக்கனைப் போல உடையணிந்து நாட்டின் வீதிகளில் நடந்து சென்றார். பெரும்பாலான மக்கள் அவரைக் கண்டுகொள்ளவே இல்லை. சிலர் அவரை இடித்துத் தள்ளிவிட்டுச் சென்றனர்; ஒருசிலர் அவரை ஏளனம் செய்தனர். ஆனால், தன் சிறிய குடிசைக்கு வெளியே அமர்ந்திருந்த ஒரு மூதாட்டி மட்டும் அவரை அன்போடு உள்ளே அழைத்தார். அவருக்கு ரொட்டியும் சூப்பும் கொடுத்து, அவரும் ஒரு மதிப்புமிக்க மனிதர் என்பதைப் போல அவருடைய பேச்சைக் கனிவோடு கேட்டார்.

பின்னர், தான் வரவேற்ற அந்தக் களைப்படைந்த வழிப்போக்கன் நாட்டின் அரசரே என்பதை அறிந்ததும், அந்த மூதாட்டி நடுங்கியபடியே, " அரசே, எளிய உணவைக் கொடுத்துவிட்டேன், மன்னியுங்கள்" என்றார். அதற்கு அரசர், " அரண்மனைகளில் இருப்பவர்கள்கூட எனக்குக் கொடுக்காத ஒன்றை— உன் இதயத்தை— நீ எனக்குக் கொடுத்தாய்" என்று நெகிழ்ச்சியோடு கூறினார்.

இந்தச் சிறிய கதை, இன்றைய பெருவிழாவின் மையக் கருத்தான ' அனைத்துலக அரசராம் கிறிஸ்து ' என்பதன் ஆழத்தை நமக்குத் திறந்துகாட்டுகிறது.

இவ்வுலகம் இதுவரை கண்டிராத ஒரு தனித்துவமான அரசாட்சி இயேசுவினுடையது.

பொதுவாக ' அரசர் ' என்றதும் நம் நினைவுக்கு வருவது அதிகாரம், ஆடம்பரம், சடங்குகள், மணிமுடிகள், அரண்மனைகள், படைபலம் மற்றும் ஆளுமை ஆகியவைதான். இன்றும் முடியாட்சி நிலவும் நாடுகளில், அரசர்களும் அரசிகளும் கௌரவத்தின் சின்னங்களாகவே பார்க்கப்படுகிறார்கள்.

பண்டைய காலத்தில், போர்க்களத்தில் படைகளை வழிநடத்தும் வீரனாகவோ, குடிமக்கள் மீது அதிகாரம் செலுத்தும் ஆட்சியாளனாகவோ அரசன் கருதப்பட்டான். வரலாற்றில், மக்கள் துன்புறும்போது தங்களை மட்டும் வளப்படுத்திக்கொண்ட கொடுங்கோலர்களையும் நாம் பார்த்திருக்கிறோம்.

ஆனால், கடவுள் தம் திருமறையில்— குறிப்பாக இறைவாக்கினர் எசேக்கியேல் வழியாக— ஓர் அரசரைப் பற்றிப் பேசும்போது, முற்றிலும் மாறுபட்ட ஒரு சித்திரத்தை நமக்குத் தருகிறார். அது ஒரு போர்வீரனின் சித்திரம் அல்ல; மாறாக, ஓர் ஆயனின் சித்திரம்.

" நானே என் மந்தையைத் தேடிச் சென்று பேணிக்காப்பேன்."

ஓர் உண்மையான ஆயன் தன் சுயநலத்திற்காக மந்தையைப் பயன்படுத்திக்கொள்ளமாட்டான். அவன் காணாமற்போனதைத் தேடுவான்;

காயப்பட்டதற்குக் கட்டுப்போடுவான்;
நலிந்தவற்றைத் திடப்படுத்துவான்;

நல்ல மேய்ச்சல் நிலத்திற்கு மந்தையை நடத்திச் செல்வான். இஸ்ரயேலின் அரசர்களிடமும் தலைவர்களிடமும் கடவுள் இந்த மேய்ப்புப் பணியை ஒப்படைத்தார். ஆனால் அவர்களோ மந்தையைக் கவனிப்பதற்குப் பதிலாக த் தங்களையே கவனித்துக்கொண்டார்கள். இதைக் கண்ட கடவுள் எசேக்கியேல் வழியாக, " என் ஆடுகளை மேய்ப்பதற்குப் பதிலாக உங்களையே மேய்த்துக்கொண்டீர்கள்" என்று ஆதங்கப்படுகிறார்.

எனவேதான் கடவுள், " நானே என் மக்களை மேய்ப்பேன்" என்று வாக்களிக்கிறார். அந்த வாக்குறுதி இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியது.

இன்று கிறிஸ்து அரசர் பெருவிழாவில், பொன்னாலான அரியணையில் ஆடம்பரமாக வீற்றிருக்கும் ஓர் ஆட்சியாளரை நாம் கொண்டாடவில்லை. மாறாக, காயப்பட்ட ஆட்டைத்தன் தோளில் சுமந்துசெல்லும் நல்ல ஆயனான அரசரை நாம் கொண்டாடுகிறோம். மண்டியிட்டுத் தம் சீடர்களின் பாதங்களைக் கழுவிய அரசரைக் கொண்டாடுகிறோம். பொன்முடிக்குப் பதிலாக முள்முடி சூட்டப்பட்ட அரசரைக் கொண்டாடுகிறோம். தம் குடிமக்கள் தமக்காக உயிர்விடவேண்டும் என்று எண்ணாமல், தம் குடிமக்களுக்காகத் தம் உயிரையே கொடுத்த அரசரைக் கொண்டாடுகிறோம்.

வரலாற்றில் எத்தனையோ ஆட்சியாளர்கள் தங்களைக் காத்துக்கொள்ள மற்றவர்களைப் பலிகொடுத்தார்கள். ஆனால் நமக்கோ, மற்றவர்களை மீட்கத் தம்மையே பலியாகக் கொடுத்த ஓர் அரசர் இருக்கிறார்!

இன்றைய நற்செய்தி ஒரு மாபெரும் காட்சியை நம் கண்முன் நிறுத்துகிறது: மானிடமகன் தம் வானதூதர் அனைவரோடும் மாட்சியுடன் வந்து, தம் அரியணையில் வீற்றிருக்கிறார். சிஸ்டைன் சிற்றாலயத்தில் (Sistine Chapel) மைக்கேல்ஆஞ்சலோ வரைந்த ஓவியத்தைப்போல, அனைத்து நாடுகளும் நடுவராம் கிறிஸ்துவின் முன் கூடியிருக்கின்றன. மேலோட்டமாகப் பார்த்தால், இதுவே நற்செய்தியின் உச்சக்கட்டம்போலத் தோன்றும். ஆனால் வியப்பு என்னவென்றால், அதுவல்ல உச்சக்கட்டம்!

மத்தேயு நற்செய்தியில் இப்பகுதிக்கு அடுத்தபடியாகத் தொடங்குவது இயேசுவின் பாடுகளின் வரலாறு. மாட்சிமைமிக்க நடுவர், பாடுபடும் மீட்பராக மாறுகிறார். அரியணையில் வீற்றிருக்கும் அரசர், சிலுவையில் தொங்கும் அரசராகிறார். செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் பிரித்தெடுக்கும் அவரே, மக்களால் புறக்கணிக்கப்பட்டு, ஆடைகள்

உரியப்பட்டு, காயப்படுத்தப்பட்டு, தாகத்தால் தவித்து, சிறைப்படுத்தப்பட்டு, கைவிடப்படுகிறார்.

இது எல்லாவற்றையும் மாற்றிப்போடுகிறது!

ஏனெனில், நமக்குத் தீர்ப்பளிக்கும் நடுவர், நம்மை நன்கு புரிந்துகொண்ட மீட்பராகவும் இருக்கிறார். அவர் எங்கோ தொலைவிலிருந்து தீர்ப்பளிப்பவர் அல்ல; நம் பாதைகளில் நடந்தவர், நம் துயரங்களைச் சுமந்தவர், நம் சோதனைகளை அறிந்தவர், நம் பலவீனங்களை அனுபவித்தவர், நம் தனிமையின் வலியை உணர்ந்தவர். அவர் வெறும் அரசமுடியை மட்டும் அணிந்தவரல்ல; முள்முடியையும் தாங்கியவர்.

அப்படியானால், அவருடைய தீர்ப்பின் அளவுகோல் என்ன?

வெற்றியா? இல்லை.

புகழா? இல்லை.

சாதனைகளா? இல்லை.

வெறும் வெளிப்படையான பக்தி வேடங்களா? அதுவும் இல்லை.

அன்பு மட்டுமே!

புனித சிலுவையின் யோவான் மிக அழகாகக் கூறியதுபோல: " வாழ்வின் மாலைப்பொழுதில், நாம் அன்பின் அடிப்படையிலேயே தீர்ப்பிடப்படுவோம்."

பசித்திருப்போர், தாகமாயிருப்போர், அந்நியர், நோயுற்றோர், ஆடையற்றோர் மற்றும் சிறையிலிருப்போர் ஆகியோரோடு இயேசு தம்மை முழுமையாக அடையாளப்படுத்திக்கொள்கிறார்: " மிகச் சிறியோராகிய என் சகோதர ர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்."

என்னவொரு வியப்பூட்டும் இறைவெளிப்பாடு! இப்பேரண்டத்தின் அரசர், மானிடத்தின் மிக எளியவர்களின் உருவில் தம்மை மறைத்துவைத்திருக்கிறார்.

அன்னை தெரசா இந்த உண்மையை ஆழமாக உணர்ந்திருந்தார். ஒருமுறை கல்கத்தா வீதிகளில் மரணத்தறுவாயில் கிடந்த ஒருவரை அவர் தூக்கினார். உடல் முழுவதும் புண்களால் நிறைந்திருந்த அவரை மருத்துவ ரீதியாகக் காப்பாற்றமுடியவில்லை. ஆனால், அவர் தனிமையில் இறந்துவிடக்கூடாது என்பதற்காக அன்னை அவருடைய கையைப் பற்றிக்கொண்டிருந்தார். பின்னர் அன்னை தெரசா, " இவர்கள் ஒவ்வொருவரும் மாறுவேடத்தில் இருக்கும் இயேசுவே" என்றார்.

தூர் நகரப் புனித மார்ட்டினும் இதைப் புரிந்துகொண்டார். அவர் திருமுழுக்குப் பெறுவதற்கு முன்பு, ஓர் இளம் போர்வீரனாக இருந்தபோது, குளிரில் நடுங்கிக்கொண்டிருந்த ஒரு

பிச்சைக்காரனுக்காகத் தன் மேலங்கியை இரண்டாகக் கிழித்துப் பாதியைக் கொடுத்தார். அன்றிரவு அவர் கண்ட கனவில், அந்தக் கிழிந்த மேலங்கியை அணிந்தவராக இயேசு காட்சியளித்து, வானதூதர்களிடம், " மார்ட்டின் எனக்கு ஆடை அணிவித்தார்" என்றுகூறினார்.

அங்கேரி நாட்டுப் புனித எலிசபெத்தும் இதை உணர்ந்திருந்தார். அரண்மனைச் சுகபோகங்களுக்கு நடுவே வாழ்ந்த ஓர் இளவரசியான அவர், ஏழைகளுக்கு ரகசியமாக ரொட்டிகளை எடுத்துச்செல்வார். ஒருமுறை அவரை வழிமறித்து, மேலங்கிக்குள் என்ன மறைத்துவைத்திருக்கிறாய் என்று கேட்டபோது, அந்த ரொட்டிகள் ரோஜா மலர்களாக மாறியிருந்ததாக ஒரு மரபுக்கதை கூறுகிறது. இது வரலாறோ அல்லது மரபுக்கதையோ, அது சொல்லும் செய்தி உண்மையானது: அன்பு, நம் எளிய செயல்களைக் கடவுளின் பார்வையில் அழகானவையாக மாற்றுகிறது.

இன்றைய நற்செய்தியில் நமக்கு ஆறுதல் தரும் மிக முக்கியமான உண்மை இதுதான்: நாம் செய்யும் அன்றாட அன்புச் செயல்களுக்கு நித்திய மதிப்பு உண்டு.

நேர்மையாளர்கள் வியப்புடன் கேட்கிறார்கள்: " ஆண்டவரே, எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகவோ தாகமுள்ளவராகவோ கண்டோம்?" தாங்கள் செய்த எளிய செயல்கள் நித்திய வாழ்விற்குரியவை என்பதை அவர்கள் அறியவே இல்லை. நோயுற்றோரைச் சந்திப்பது, உணவைப் பகிர்ந்துகொள்வது, பிறர் பேசுவதைக் காதுகொடுத்துக் கேட்பது, ஆறுதலான ஒரு வார்த்தை சொல்வது, ஒரு குவளைத் தண்ணீர் கொடுப்பது, அமைதியாகச் செய்யும் சிறிய தியாகம்— இவை அனைத்தும் கிறிஸ்துவையே சந்திக்கும் தருணங்களாக மாறுகின்றன.

சாதாரண இரக்கச் செயல்களின் வழியாக விண்ணகம் இவ்வுலகிற்குள் அமைதியாக நுழைகிறது என்பதை நற்செய்தி நமக்கு நினைவூட்டுகிறது.

அதேவேளையில், இடப்பக்கத்தில் நிற்பவர்களிடம் இயேசு கடுமையான வார்த்தைகளைப் பேசுகிறார். அவர்களுடைய பாவம் ஏதோ பெரிய அளவில் செய்த கொடூரம் அல்ல; மாறாக, அலட்சியம். அக்கறையின்மை. அன்பு செய்ய வாய்ப்பு இருந்தும் அன்பு செய்யத் தவறியது.

நற்செய்தியின் இப்பகுதி நம்மைச் சற்று கலங்கடிக்கலாம். நாம் நேர்மையாகச் சிந்தித்துப்பார்த்தால், நாம் இன்னும் அதிகமாக உதவியிருக்கக்கூடிய மனிதர்கள் நம் நினைவுக்கு வருவார்கள். பரிவைவிட நம் சௌகரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த தருணங்களும், துன்பத்தைக் கண்டும் காணாமல் கடந்துசென்ற நேரங்களும் நம் கண்முன் நிழலாடும்.

இருப்பினும், பயம் என்பது இன்றைய பெருவிழாவின் இறுதி வார்த்தை அல்ல.

இரக்கமே இறுதி வார்த்தை!

ஏனெனில், நமக்குத் தீர்ப்பளிக்கும் நடுவர், காணாமற்போன ஆட்டைத்தேடி வரும் நல்ல ஆயனாகவும் இருக்கிறார்.

ஜெர்மன் மொழியில் ' ரிக்டன் ' (richten) என்ற சொல்லுக்கு ' தீர்ப்பளிப்பது ' என்றும் பொருள் உண்டு; அதே நேரத்தில் ' மீண்டும் சரிசெய்வது ' அல்லது ' பழுதுபார்ப்பது ' என்றும் ஓர் அழகான பொருள் உண்டு. ஒரு நாற்காலி உடைந்துவிட்டால், நாம் அதைத்தச்சரிடம் கொண்டுசென்று, " இதைச் சரிசெய்து தரமுடியுமா?" என்று கேட்போம்.

நம் அரசராம் கிறிஸ்து செய்வதும் இதைத்தான். உடைந்தவற்றைக் கண்டனம் செய்வதற்காக மட்டும் அவர் வரவில்லை; மாறாக, அவற்றைச் சீர்படுத்தவும், குணப்படுத்தவும், விழுந்தவற்றைத் தூக்கிநிறுத்தவும் வருகிறார்.

நம் வாழ்வில் உடைந்துபோன அனைத்தையும்— நம் தோல்விகள், காயங்கள், வருத்தங்கள், பாவங்கள், பயங்கள்— அவர் முன் கொண்டுவரலாம்." ஆண்டவரே, என்னை மீண்டும் சரிசெய்தருளும்; காயப்பட்டதைக் குணமாக்கும்; இழந்ததை மீட்டுத்தாரும்" என்று நாம் மன்றாடலாம். அவர் நிச்சயம் செய்வார்.

இறுதியாக, மற்றொரு நிகழ்வோடு என் மறையுரையை நிறைவுசெய்கிறேன்.

இரண்டாம் உலகப்போரின்போது, போர்வீரன் ஒருவன் குண்டுவீச்சால் தகர்க்கப்பட்ட ஒரு கிராமத்திற்குத் திரும்பினான். அங்கே இடிந்துகிடந்த ஓர் ஆலயத்தின் இடிபாடுகளுக்குள் கிறிஸ்துவின் திருவுருவச்சிலை உடைந்துகிடப்பதைக் கண்டான். குண்டுவீச்சில் அச்சிலையின் இரு கைகளும் சிதறிப்போயிருந்தன. பின்னாளில் அந்த ஆலயம் மீண்டும் கட்டப்பட்டபோது, மக்கள் சேதமடைந்த அந்தச் சிலையை மீண்டும் ஆலயத்திற்குள் வைத்தார்கள். ஆனால் அதன் கீழே இவ்வாறு எழுதிவைத்தார்கள்:

" இப்போது இவ்வுலகில் கிறிஸ்துவுக்கு நம் கைகளைத் தவிர வேறு கைகள் இல்லை."

இதுதான் இன்றைய பெருவிழாவின் மறைபொருள்.

அனைத்துலக அரசராம் கிறிஸ்து, நம் கைகள் வழியாகவே காணாமற்போனவர்களைத் தொடர்ந்து தேடுகிறார்.

நம் தாராள குணத்தின் வழியாகவே பசித்தோருக்குத் தொடர்ந்து உணவளிக்கிறார்.

நம் உடனிருப்பின் வழியாகவே துன்புறுவோருக்குத் தொடர்ந்து ஆறுதல் அளிக்கிறார்.

நம் அன்பின் வழியாகவே அந்நியரைத் தொடர்ந்து ஏற்றுக்கொள்கிறார்.

ஒருநாள், நமக்கே பேரதிர்ச்சியும் வியப்பும் அளிக்கும்விதமாக, நம் வாழ்க்கைப்பாதையில் கடவுள் வைத்த காயப்பட்ட மனிதர்களை நாம் அன்பு செய்தபோது, நாம் நம் அரசரையே அன்பு செய்தோம் என்பதைக் கண்டுகொள்வோம்.

ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,**Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai